**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண். 7/2024-ன் அசல் வழக்கு எண்.272/2015**

திரு. சுரேஷ், த/பெ. திரு.வரதன் .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. திரு. பக்தவச்சலம் (இறந்துவிட்டார்), த/பெ. திரு.ராஜீகவுண்டர்,
2. திரு. பரந்தாமன், த/பெ. திரு.பக்தவச்சலம்,
3. திரு. கிருஷ்ணன், த/பெ. திரு.நடேச செட்டிமேஸ்திரி,
4. திரு. நாகன், த/பெ. திரு.நடேச செட்டிமேஸ்திரி,
5. வட்டாட்சியர் அவர்கள், செய்யாறு
6. கோட்டாட்சியர் அவர்கள், செய்யாறு
7. மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருவண்ணாமலை
8. சார்பதிவாளர் அவர்கள், தூசி
9. மாவட்ட பதிவாளர் அவர்கள், செய்யாறு
10. திருமதி. முனியம்மாள், க/பெ. திரு.பக்தவச்சலம்,
11. திருமதி. சாந்தி, க/பெ. திரு.காமராஜ்,
12. திருமதி. சுந்தரி, க/பெ. திரு.பட்டாபி,
13. திருமதி. நாகேஸ்வரி, க/பெ. திரு.வரதன்,
14. திருமதி. புனிதவதி, க/பெ. திரு.வரதராஜன்,
15. திரு. பெருமாள், த/பெ. திரு.வரதராஜன்,
16. திரு. அரிபிரகாஷ், த/பெ. திரு.வரதராஜன் .... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு 22.03.2024 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.டி.பி.சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவையில் வழக்கு நிலுவையில் இறந்துவிட்டார், 2, 10 முதல் 16 வரையிலான எதிர்மனுதாரர்கள்/2, 10 முதல் 16 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கறவாதி வழக்கு நில்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்க்கப்பட்டு, மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்து இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்.......

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கிலும், 1ம் பிரதிவாதி, மனுதாரர்/வாதி மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கிலும் தாவா சொத்து ஒரே சொத்து என்பதாலும் மேற்படி இருவழக்குகளிலும் தரப்பினர்களும் ஒரே நபர்கள் என்பதாலும் மேற்படி அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கினையும், அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கினையும் ஒன்றாக சேர்த்து நடத்த தக்க உத்தரவு பிறப்பிக்க மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

(i). மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தாவா சொத்துக்களுக்கான தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியும், ஆவண எண்.784/2003 என்ற ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகைக் கோரியும், தான் மேற்படி அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் உரிமையை விளம்புகை செய்ய கோரியும், நிரந்தரதடையுத்தரவு பரிகாரம் கோரியும் 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

(ii). மனுதாரர் தாக்கல் செய்துள்ள தாவாவின் தாவா சொத்தும் 1ம் வாதி தன் மீது தாக்கல் செய்துள்ள தாவாவின் தாவா சொத்தும் ஒரே சொத்தாகும், அதேபோல் மேற்படி இரு வழக்குகளிலும் கண்டுள்ள தரப்பினர்களும் ஒரே நபர்கள் ஆவார்கள். மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி-1ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இந்நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர் மீது 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கில் வாதி தரப்பு சாட்சியத்திற்காக இந்நீதிமன்றத்தால் வாய்தா போடப்பட்டுள்ளது.

(iii). மேற்படி இரு வழக்குகளிலும் கண்டுள்ள தாவா சொத்துக்களும் தரப்பினர்களும் ஒன்று என்பதால் மேற்படி இருவழக்கினையும் ஒன்றாக சேர்த்து நடத்தினால் மட்டுமே ஒரு முழுமையான தீர்ப்பிணை மனுதாரரால் பெறமுடியும். மேற்படி இரு வழக்குகளையும் தனித்தனியாக நடத்தினால்

தீர்ப்புகள் மாறுபடும் சூழ்நிலை ஏற்படும் மனுதாரரும், எதிர்தரப்பினர்களும் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். மேலும் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத அளவிற்கு பெருத்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படும். மேலும் மனுதாரர் தீர்ப்பின் பலனை அடையமுடியாத சூழ்நிலையும் ஏற்படும்.

(iv). மேலும் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கிலும், 1ம் பிரதிவாதி தன் மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கிலும் தாவா சொத்து ஒரே சொத்து என்பதாலும் மேற்படி இருவழக்குகளிலும் தரப்பினர்களும் ஒரே நபர்கள் என்பதாலும் மேற்படி அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கினையும், அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கினையும் ஒன்றாக சேர்த்து நடத்த அனுமதி அளிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 10 முதல் 16 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்கப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>:-**

(i). மனுதாரரின் மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுவில் கண்டுள்ள அனைத்து சங்கதிகளையும் இவ்வெதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுக்கின்றார்கள். இவ்வெதிர்மனுதாரர் இந்த வழக்கு விசாரணைக்கு வரும் பொழுதே இந்த வழக்கும் அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கும் ஒரே சொத்து சம்மந்தப்பட்ட வழக்குகள் என்றும் அதனால் 2 வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்தினால்தான் உரிய பரிகாரம் கிடைக்குமென்றும் தன்னுடைய ஆட்சேபனையை இந்நீதிமன்றத்தில் தெரியப்படுத்தியிருந்தார். ஆனால் மனுதாரரோ அப்பொழுது 2 வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்த முடியாது என்றும் தனித்தனியாகத்தான் நடத்த வேண்டுமென்றும் ஆட்சேபனை செய்தார். அதன்பேரில் அசல் வழக்கு எண்.272/2015 வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(ii). அவ்வாறு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் மனுதாரரும் தன்தரப்பில் தன்னையும் தன்தரப்பு சாட்சியங்களையும் விசாரணை செய்துள்ளார். அதே போன்று இவ்வெதிர்மனுதாரர் தரப்பில் இவ்வெதிர்மனுதாரர் தன்னை எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாக விசாரணைக்கு உட்படுத்திக் கொண்டார். இந்த சூழ்நிலையில் 2 வழக்குகளையும் ஒன்றாக நடத்த வேண்டுமமென்று மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது உள்நோக்கமுடையது. ஏற்கனவே ஒன்றாக நடத்த வேண்டுமென்று இவ்வெதிர்மனுதாரர் தரப்பில் தெரியப்படுத்தப்பட்டு மனுதாரர் அதற்கு

ஆட்சேபனை செய்ததால் தனித்தனியாக 2 வழக்குகளும் நடந்து வருகின்றது. அந்த 2 வழக்குகளிலும் அசல் வழக்கு எண்.272/2015 வழக்கில் வாதியும் வாதிதரப்பு சாட்சியங்களையும் விசாரணை செய்யப்பட்டனர். இவ்வெதிர்மனுதாரர் தரப்பிலும் இவ்வெதிர்மனுதாரர் விசாரணை செய்யப்பட்டார். இந்த சூழ்நிலையில் 2 வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்துவது என்பது இயலாத ஒன்றாகும். ஏற்கனவே ஒரு வழக்கில் சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதிதரப்பு முதல் சாட்சியம் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ளது.

(iii). மேலும் தற்போது 2 வழக்குகளும் ஒன்றாக சேர்த்து நடத்த வேண்டுமென்றால் ஏற்கனவே விசாரணை செய்யப்பட்ட வாதிதரப்பு சாட்சியங்கள் மீண்டும் அழைக்கப்பட்டு மீண்டும விசாரணை செய்யப்பட வேண்டியுள்ளது. அதனால் தேவையில்லாமல் இதுநாள் வரையில் இருந்துவிட்டு தற்போது 2 வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்த வேண்டுமென்று மனு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கது அல்ல. இந்த வழக்கு முடியும் தருவாயில் உள்ளது. அந்த வழக்கு இன்னும் விசாரணைக்கே உத்தரவாகவில்லை. அதனால் மனுதாரரின் நோக்கம் வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டுமென்பதே. எனவே இம்மனுவினை இவ்வெதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அசல் வழக்கு எண்.272/2015 மற்றும் அசல் வழக்கு எண்.267/2014 ஆகிய இரு வழக்குகளும் ஒரே சொத்து குறித்தும், ஒரே தரப்பினர்கள் குறித்தும், ஒரே பரிகாரம் குறித்தும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள். மேற்படி வழக்குகளில் சாட்சியம் ஒன்றாக விசாரிக்கப்பட்டு இருவழக்குகளை ஒருசேர நடத்தப்பட வேண்டும் என்றும் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் சாட்சியத்தின்போது எடுத்துரைக்கப்பட்டு இருவழக்குகளும் ஒருசேர நடத்த முடிவு செய்யப்பட்டு சாட்சிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மனுதாரர் தரப்பில் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்படாத காரணத்தால் அக்குறையை நிவர்த்தி செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனு அனுமதிக்கப்படுவதால் இரு தரப்பிற்கும் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்புடையது அல்ல. ஒரு வழக்கில் மட்டுமே சாட்சிய விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே எதிர்மனுதாரர்கள் தரப்பில் இருவழக்குகளும் ஒன்றாக நடத்த

வேண்டும் என்று கூறியதை மனுதாரர் ஏற்கவில்லை. சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டு தற்போது இம்மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

6. மனுதாரரின் மனு எதிர்மனுதாரர்களின் எதிருரை மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்?

**7.தீர்வு-**

இருதரப்பு வாதங்கள், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், மனுதாரர் அசல் வழக்கு எண்.272/2015 என்ற வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.267/2014 என்ற வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள தாவாவின் தாவா சொத்தும் பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள தாவாவின் சொத்தும் ஒரே சொத்தாகும், அதேபோல் மேற்படி இரு வழக்குகளிலும் கண்டுள்ள தரப்பினர்களும் ஒரே நபர்கள் ஆவார்கள். மேற்படி இரு வழக்குகளிலும் கண்டுள்ள தாவா சொத்துக்களும் தரப்பினர்களும் ஒன்று என்பதால் மேற்படி இருவழக்கினையும் ஒன்றாக சேர்த்து நடத்தினால் மட்டுமே ஒரு முழுமையான தீர்ப்பினை மனுதாரரால் பெறமுடியும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்படி இம்மனு சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், ஏற்கனவே எதிர்மனுதாரர்கள் தரப்பில் இது குறித்து தெரிவிக்கப்பட்டு மனுதாரர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றும், எனவே இம்மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் அசல் வழக்கு எண்.267/14 மற்றும் அசல் வழக்கு எண்.272/15 ஆகிய இரு வழக்கிலும் தாவா சொத்து ஒன்று தான். மேலும் இரு வழக்குகளிலும் வழக்கு தரப்பினர்கள் ஒரே நபர்களாக உள்ளார்கள். இரு வழக்குகளிலும் கோரப்பட்டுள்ள தீர்வுகளுக்கான பரிகாரமும் ஒன்றாகவே உள்ளது. மேற்படி இரு வழக்குகளும் தனித்தனியாக நடத்தப்பட்டால் இருவழக்குகளிலும் காணப்படும் தீர்வுகளில் முரண்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும்

வழக்கு கோப்பினை ஆராய்கையில் அசல் வழக்கு எண்.267/14 மற்றும் அசல் வழக்கு எண்.272/15 ஆகிய வழக்குகளில் எழுவினாக்கள் வனையப்பட்டு சாட்சிய விசாரணைக்காக வழக்குகள் நிலுவையில் வைக்கப்பட்டு, அசல் வழக்கு எண்.272/15 என்ற வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு சாண்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு சாட்சிய விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.267/14ல் 15.12.2017 முதல் அசல் வழக்கு எண்.267/14 மற்றும் அசல் வழக்கு எண்.272/15 ஆகிய இரு வழக்குகளும் ஒரு சேராக விசாரணைக்கு எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னிட்டு அது முதல் இருவழக்குகளும் ஒன்றாக விசாரணைக்கு நடத்தப்பட்டதாகவே காணப்படுகிறது.

9. மேலும் அசல் வழக்கு எண்.272/15 வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்தின்போது இரு வழக்குகளும் ஒன்றாக நடத்தப்படுவது குறித்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில், மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அது குறித்து உரிய மனு தாக்கல் செய்வதாக அவகாசம் கோரி பின்னிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண்.267/14ல் எந்தவிதமான சாட்சியமும் முன்னிலைப்படுத்தாமல் அசல் வழக்கு எண்.272/15ல் மட்டுமே சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கு எண். 267/14 மற்றும் அசல் வழக்கு எண். 272/15 ஆகிய இரு வழக்குகளிலும் ஒருசேர நடத்த அனுமதிக்கப்பட்டு சாட்சிய விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து மனு தாக்கல் செய்து அனுமதி பெறப்படாததால் மனுதாரர்/வாதி தரப்பில் தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது புலப்படுகிறது.

10. மேற்படி ஏற்கனவே இரு தரப்பிலும் ஒருசேர இருவழக்குகளையும் நடத்த ஒத்திசைவு வழங்கப்பட்டு சாட்சிய விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் உரிய மனு தாக்கல் செய்து அனுமதி பெறவில்லை என்ற காரணத்தால் சாட்சிய விசாரணையை மீண்டும் துவக்க அனுமதி அளிப்பது நீதியின் நலன்பால் உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது. மேற்படி பிழையானது சரி செய்து கொள்ளக்கூடிய பிழைதான். மேலும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள சாட்சிய விசாரணை குறித்து கூடுதலாக சாட்சியம் அளிக்க வேண்டியிருந்தால் அது குறித்து இரு தரப்பிலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து கொள்ளலாம்.

11. மேலும் இம்மனு சாட்சிய விசாரணையின்போதே தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டியது. இம்மனு அனுமதிக்கப்படுவதால் இருதரப்பிற்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்பட வாய்ப்பில்லை மாறாக உரிய தீர்வு காண ஏதுவாக அமையும். எனவே இரு வழக்குகளிலும் ஒரே சாட்சிய விசாரணையை ஏற்று இரு தரப்பிற்கும் உரிய தீர்வு காண்பதே நீதியின் நலன்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு ஏற்கனவே இரு வழக்குகளும் ஒரு சேர நடத்தப்பட்டு வருவதையும் கருத்தில் கொண்டு உபய தரப்பினர்களே மனுவின் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்கவேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S D AYSH BEGUM
Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.03.26 18:10:58 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>:-**

- இல்லை -

S D AYSH BEGUM
Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.03.26 18:11:15 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.